பக்கங்கள் 8 விலை சதம் 40.

தீபாவளிவாழ்த்துக்கள்

67, 68, MODERN MARKET, JAFFNA.
Rich COFFEE BAR
67, 68, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
றிச் கோப்பி பார்

# ஈழநாடு
The EELA NADU

ஊர்: 19 ஐப்பசி 25 ஜுல்ஹு: 27 இதழ் 271
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-11-77

வாடிக்கையாளர்களுக்கு
எமது
தீபாவளி வாழ்த்து

செல்லையா
சிவலிங்கம்
தங்கப் பவுண்
நகை வியாபாரம்

190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7162

அமைச்சர்களுடன் பேசுவதற்கு

# இந்த எம்.பிக்கள் பொறுப்பாக இருப்பர்

### எமது வாழ்த்துக்கள்

வாசகர்கள், விளம்பர தாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது. இன்றைய 'ஈழநாடு' இதழ் தீபாவளி மலராகவே வருகின்றது.

ஆ-ர்.

## கூட்டணி பேரவைக்குழு செய்துள்ள புதிய ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்ப் பிரதேசப் பிரச்சினைகள், மற்றும் தமிழ் மக்கள் தொடர்பான விஷயங்கள் குறித்து அரசாங்க அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்தனியே தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களை நியமித்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு அமைச்சு தொடர்பான விஷயம் பற்றி அந்த அமைச்சருடன் பேசுவதாயின் அதற்காக நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதியின் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அமைச்சரைச் சந்திப்பார்கள்.

இதன்படி பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சு தொடர்பான விஷயங்களை திரு. அ. அமிர்தலிங்கம் கவனித்துக் கொள்வார்.

இதேபோன்று நீதி நிர்வாக விஷயங்களில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நல்லூர்த் தொகுதி உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் பொறுப்பாய் இருப்பார்.

தோட்டத்தொழில்அமைச்சு விவகாரங்களுக்கு திரு. எஸ். தொண்டமானும், புடவைக் கைத்தொழில் விவகாரங்களுக்கு திரு. வி. என். நவரத்தினமும், சமூகசேவை தகவல் ஒலிபரப்பு அமைச்சு விவகாரங்களுக்கு திரு. செ. இராசதுரையும், வெளி விவகார, உள்ளூராட்சி, வீடமைப்பு விஷயங்களுக்கு திரு. வி. தர்மலிங்கமும், போக்குவரத்து அமைச்சு விவகாரங்களுக்கு திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளையும், விவசாய, மீன்பிடி அமைச்சுக்கு திரு. துரைரத்தினமும், நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு திரு. ரி. சிவசிதம்பரமும், உணவுக் கூட்டுறவு அமைச்சுக்கு திரு. ஆனந்தசங்கரியும், கலாச்சார அலுவல்கள், உத்தியோக மொழி விவகாரங்களுக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினமும் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், திட்டமிடல் பொருளாதாரத் திட்டச் செயற்படுத்தல் அமைச்சுக்கு திரு. செல்லத்தம்புவும், காணி அமைச்சுக்கு திரு. கணேசலிங்

(8-ம் பக்கம் பார்க்க)

### இலங்கை வங்கியின் இரு புதிய கிளைகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இரண்டு புதிய இலங்கை வங்கிக்கிளைகள் சாவகச்சேரியிலும், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலும் நாளை வெள்ளிக்கிழமை திறக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணக்கிளையை காலை 10-00 மணிக்கு, யாழ்ப்பாண தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனும், சாவகச்சேரிக்கிளையை மாலை 3-00 மணிக்கு சாவகச்சேரி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வ. ந. நவரெத்தினமும் திறந்துவைப்பார். (கெ)

## திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. என். தியாகராஜாவும் உதவி அத்தியட்சகர் திரு எஸ். சொக்கலிங்கமும் திடீரென நேற்று இடமாற்றம் செய்யப்பட்டனர்.

திரு. தியாகராஜா மதவாச்சிக்கும், திரு. சொக்கலிங்கம் கொழும்புக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடமாற்ற உத்தரவுகள் கொழும்பிலிருந்து சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மூலம் விசேஷமாகக் கார் ஒன்றில்கொண்டுவரப் பட்டதாகக் கூறப்படுகிறது.

சமீபத்திய கலவரத்தின் போது அகதிகளைஏற்றி இறக்குவதில் பெரும் உதவியாக இந்த இருவரும் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டது இப்பகுதி இ. போ. ச. ஊழியர்கள் மத்தியில் மட்டுமல்லாது பொதுமக்கள் மத்தியிலும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

## "நீதிக்கான போராட்டம் வெற்றிபெறட்டும்"

### யாழ். எம்.பியின் தீபாவளி வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

"ஒடுக்கப்பட்ட மக்களுக்காக- நீதிக்காக போராடும் மக்களுக்காக- இறைவன் என்றுமே போராடுகின்றான் என்ற பேருண்மையை நரகாசுரனை அழித்ததின் மூலம் உலகுக்கு கண்ணன் காட்டிய இத் தீபாவளித்திருநாளில் ஒடுக்கப்பட்ட எம் இனத்தின் இன்னல்கள் தீர்ந்து அவர்களின் நீதிக்கான போராட்டம் வெற்றி பெறவேண்டுமென வாழ்த்துகிறேன்"

யாழ்ப்பாணத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரன் தீபாவளித்திருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார். (இ,

வாடிக்கையாளர், விற்பனையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும்

எமது உள்ளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

நமது நாட்டு மக்களின் சிக்கன செலவிற்காக
சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது
RED COW BRAND BUTTER

யாழ்நகர் விற்பனையாளர்
சிறி சாயி ஸ்ரோர்ஸ்
அண்ணா கோப்பி பார்
கெண் வூட் கொFபி பார்
றிச்கோFபீ பார்
நவீனசந்தை, யாழ்நகர்.

RICOH HOTEL றிக்கோ ஹோட்டல்
நவீன சந்தைக்கு முன்பாக
ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 464

சுன்னாகம் மக்களின் வசதிக்காக
அண்ணா கோப்பிக்கடை
No. 1 நவீனசந்தை, சுன்னாகம்.

நெல்லியடி மக்களின் வசதிக்காக
மொடோன் ஸ்டோர்
பஸ் நிலையம், நெல்லியடி.

முல்லைத்தீவு மக்களின் வசதிக்காக
குமாரவேல் அன் சன்ஸ்
மெயின் வீதி, முல்லைத்தீவு.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன், கிளிநொச்சி ஆகிய (இடங்களுக்கு) இடங்களில் விற்பனை செய்ய விரும்பும் வியாபாரிகள் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

ராஜா என்டர் பிறைஸஸ்
43, கண்டி வீதி — கடவத்தை
கிளை:
19, வெலகெதர ரோட் — பதுளை

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
கணேசன் ஸ்ரோர்ஸ்
63, 78, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

## வரிவிளம்பரம்

### வகுப்புகள்

I. A. A, I. C. M. A, க. பொ. த. (உயர்தரம்), (விஞ்ஞானம், வர்த்தகம்) மீட்டல் வகுப்புக்கள். ஈகிள் இன்சிரியூட், பிரதான வீதி, காங்கேசன்துறை (மக்கள் வங்கிக்கருகாமையில்) கிளை நிலையம் 207, டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்திலும் 15-11-77 இல் ஆரம்பமாக உள்ளன. கல்வி பயில விரும்பும் மாணவர்கள் நிர்வாக இயக்குநர் திரு. ச. ராஜாவுடன் தொடர்பு கொள்ளவும். 7615

ஓமான், டுபாய், அரேபியா, அமெரிக்கா ஆகிய வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு ஒருமாத காலத்திற்குள் வெல்டிங் பயிற்சி அளிக்கப்படும் தொடர்பு கொள்ளவும்: என். ஞானசேகரம், இல. 1 8/A, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம். 7630

### தேவை

மின்பிடி உபகரணங்கள் விற்பனை செய்வதற்கும் நெசவு வேலையில் அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை. விபரங்கட்கு: மணியம்ஸ் நவீன சந்தை யாழ்ப்பாணம். 7634

### விற்பனைக்கு

மகோகனி பலகையில் செய்த எழுதும் மேசையும், புத்தக அலுமாரியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: காராளசிங்கம், 28 சீனிவாசகம் வீதி கொட்டடி, யாழ்ப்பாணம். 7632

## பஸ்ஸுக்கு பலியானார்

(யாழ்ப்பாணம்)

உபகாரப்பணம் எடுக்கச் சென்ற ஏழைப்பெண் இ. போ. ச. பஸ்ஸுக்குப்பலியானார்.

கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா மரியம்மா அல்லது வெள்ளச்சி என்ற இப்பெண்ணின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரணவிசாரணை அதிகாரி பஸ்சாரதி தம்பிராசா தளையசிங்கத்தை 1500 ரூபா பிணையில் செல்லுமாறும் 23-ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகுமபடியும் உத்தரவிட்டார் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இவர்களுக்கு சம்பளவெட்டு இல்லை

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து வேலைக்குத் திரும்பாத 23 டாக்டர்கள், 20 பார்மஸிஸ்ட்கள், உதவி வைத்தியர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோரது சம்பளவெட்டை ரத்துச் செய்வது என்று சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா தீர்மானித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அமைச்சரைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதை அடுத்தே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தீர்மானித்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்கு முன் வேலைக்குத் திரும்புமாறு அரசு விடுத்தவேண்டுகோளை ஏற்று வேலைக்குத்திரும்பாத ஊழியர்கள் தொடர்பாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது. (இ)

## பதவிஉயர்வு பரீட்சை கொழும்பில் நடைபெறும்

(கொழும்பு)

பொது எழுதுவினைஞர் சேவைக்கான இரண்டாம் தர பதவி உயர்வுக்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

இப்பரீட்சை அனுராதபுரத்தில் நடைபெறும் என்று பரீட்சாத்திகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்க எழுதுவினைஞர் சங்க இணைச் செயலாரி திரு. இரத்தின வடிவேல் பரீட்சை ஆணையாளர், திரு. இரத்ஞயக்காவைச் சந்தித்து, அனுராதபுரத்தில், நிலைமை சீராக இல்லாததினால் தமிழ் பரீட்சாத்திகள் அங்கு செல்ல அஞ்சுவதாகவும், வேறு இடத்திற்கு மாற்றுமாறும் கோரினார்.

இதைத் தொடர்ந்து பரீட்சை ஆணையாளர், பரீட்சையை கொழும்பிற்குமாற்றியுள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கு இத்தகவல், தந்திமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய சேவை சமிதி நடத்தும் அகண்ட நாம பஜனை சனிக்கிழமை 12-ம் திகதி மாலை ஆறுமணி முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரை ரஸிகரஞ்சனசபா மண்டபத்தில் நடைபெறும்.

## இன்று

(மாவிட்டபுரம்)

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் கேதார கௌரி நோன்பை முன்னிட்டு கடந்த 21 தினங்களாக நடைபெற்று வந்த இலட்சார்ச்சனை தீபாவளி தினத்தன்றுஇடம்பெற்று வந்த இலட்சார்ச்சனை இன்று சங்காபிஷேகவிழாவுடன் பூர்த்தியாக உள்ளது.

## அடையாள அட்டை வேண்டும்

(கொழும்பு)

ஜி. சி. ஈ. உயர் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அடுத்த வருடம் முதல் அடையாள அட்டை கொண்டு செல்லவேண்டும் என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ம)

## நினைவுதினம்



23-10-76ல் மறைந்த மாதகல் வ. கணபதிப்பிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மனமார நினைவு கூருகிறோம்.

திருமதி க. வள்ளியம்மை,
செல்வி க. பிரபா.
7633

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்ஸ்ரீவேங்கடேசவரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில்12-11-77ல்நடைபெறவிருந்த அதிர்ஷ்டஇலாபச்சீட்டிழுப்புகாலநிலையைமுன்னிட்டும்அடிக்கட்டைகள்வந்து சேராதகாரணத்தாலும் 14-1-78க்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதை திருப்பணி அன்பர்களுக்குமாத்திரம் அறியத்தருகின்றோம்.

திருப்பணிச்சபை.

7610

## பூட்டோ வழக்கு:

## வழக்கறிஞருக்கு அனுமதி மறுப்பு

வாகூரி, நவ. 9

கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ சார்பில் பிரிட்டிஷ் வழக்கறிஞரான திரு. ஜோன் மதியூஸ் ஆஜராவதற்கு பாகிஸ்தான் இராணுவ பீடம் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர் ஒருவர் ஓர் ஆண்டாவது பாகிஸ்தானில் தொழில் செய்திருக்கவேண்டும் என்ற சட்டத்திற்கமைவே இந்த வழக்கறிஞருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## மண்சரிவு: 24 பேர் பலி

புதுடில்லி, டிச. 9

கேரளத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் 24 பேர் மரணமானார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சினிமா டைரக்டர் மரணம்

சென்னை, நவ. 9

தென்னிந்திய திரைப்பட டைரக்டர் பத்மபூஷன் திரு. வி. என். ரெட்டி தமது 69 வது வயதில் நேற்று மாரடைப்பில் காலமானார். இவர் பிரபல திரைப்பட தயாரிப்பாளர் திரு நாகிரெட்டியின் சகோதரராவார். (இ)

## முதலாண்டு நினைவாஞ்சலி

திருமதி இராசலட்சுமி
கனகரத்தினம்
வட்டுக்கோட்டை.

தோற்றம்: 7-4-1904
மறைவு: 11-11-1976



எல்லோர்க்கும் அன்னையாய் விளங்கிய எம்தாயே என்றும் எம் உள்ளத்துள் இருப்பாய் நீயே.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
7629

## கேள்வி அறிவித்தல்

### சந்தைக் குத்தகை—1978

### பட்டினசபை மானிப்பாய்

1978-ம் ஆண்டிற்கான பின்வரும் குத்தகைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 30-11-77-ம் திகதி புதன்கிழமை காலை 10-30 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | கேள்விப் பிணை | கேள்விப்பத்திரக் கிரயம் |
|---|---|---|
| 1. சந்தையிலுள்ள ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 10-00 |
| 2. மரக்கறிச் சந்தை மீன் சந்தை (சைக்கிள் காலை உட்பட) | 100-00 | 10-00 |

இவ்வலுவலகத்தில் 28-11-77ம் திகதி 12-00 மணிவரை வழங்கப்படும் கேள்விப்பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

மேலதிக விபரங்கள், நிபந்தனைகள், காரியாலய நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஜே. பாலேந்திரா
விசேட ஆணையாளர்
மானிப்பாய் பட்டினம்

9, ஐப்பசி 1977
பட்டினசபை, மானிப்பாய்
7637

**JAFFNA MUNICIPALITY MULTI-PURPOSE CO-OPERATIVE SOCIETY LIMITED**

**CO-OP. HOSPITAL**
**KANDY ROAD, JAFFNA**

**VACANCY FOR MEDICAL OFFICER.**

There is a vacancy for a Medical Officer in the above hospital with immediate effect.

Qualification: Minimum M. B. B. S. (Ceylon)
Experience: At least 5 years service, preferably with administrative experience in the medical field.
Age: 30—45 years.
Salary: Negotiable.

Please apply on or before 24th. November 1977.

General Manager,
Jaffna Municipality M. P. C. S. Ltd.,
74/3, Alfred Duraiappah Road,
Jaffna.
7635


அன்பான எமது வாடிக்கையாளர்களுக்கு

**எமது தீபாவளி வாழ்த்துக்கள்!**

நவ நாகரிக ஆபரணங்கள் பெண்களை என்றும் யௌவனமாய்த் திகழச்செய்கின்றது!
நவநாகரிக தங்க வைர நகைகளுக்கு யாழ்நகரில் புகழ்பெற்ற நம்பிக்கையான ஸ்தாபனம்.

# செ. சிவபார்தலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

- சிறந்த வேலைப்பாடுள்ள தங்க நகைகளை விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
- ஓடர் நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
சுவையான சிற்றுண்டி வகைகள்
குளிர்பான வகைகளுக்கு
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
நியூ பிளவ்ஸ்
5, 6, மக்கள் நவீன சந்தை—யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அபிமானிகள்
அனைவருக்கும் இதயம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
∴ உள்ளூர்த் தயாரிப்புக்கள், பாட்டா, சில்வா
எலகஸ்டோ, டி. ஐ., டி. எஸ். ஐ. பாதணிகள்
∴ அலங்கார அழகு சாதனங்கள்
∴ நூல்வகைகள், பட்டின்கள், விளையாட்டுப்
பொருட்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்
நாதன்ஸ்
17, நவீனசந்தை—யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7540

வாடிக்கையாளர்கள், அபிமானிகள்,
நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளம்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
பட்டுப் புடவைகள்
பட்டு வேட்டிகள்
சின்டெக்ஸ் துணிவகைகள்
ரெடிமேட் ஆடைகள்
புதிய டிசைன்கள்
புதிய வர்ணங்கள்
சோதி
ரெக்ஸ்ரைஸ்
14, நவீனசந்தை. யாழ்ப்பாணம்.
லிங்கம்
சில்க்ஹவுஸ்
18, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
சுபாஸ் கபே ஸ்தாபனத்தாரின்
உளங் கனிந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
30 வருட சேவை!
மக்களின் சேவையே
எமது குறிக்கோள்
30 வருடம் பொதுமக்களின்
சேவையே எமது பணி
பொதுமக்களின் ஆதரவை
என்றும் நாடும்
சுபாஸ்கபே
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 578

# தீபாவளி புனிதநாள்

உலகெங்கணும் வாழும் கோடிக்கணக்கான மக்களின் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் தேசிய விழாவாகவும், நாட்டில் தர்மம் தலையெடுப்பதற்கும், ஒரு தார்மிக விழாவாகவும் தீபாவளி விளங்குகின்றது.

முன்னொரு காலத்தில் பௌமன் என்னும் அரசன், கடுந்தவம் செய்து இறைவனிடம் பலவரங்களைப் பெற்று நாட்டுக்கும் நல்லோருக்கும் தீங்கிழைத்து கொடுங்கோல் செலுத்தினான். இவனது ஆட்சியில் அல்லல்பட்டவர் பலர். துன்பசாகரத்தில் வேதனையில் மனம் வெதும்பினர். கன்னியரின் குங்குமம் சிதைக்கப்பட்டது. குடும்பப்பெண்கள் அஞ்சி வாழ நேர்ந்தது. நல்லவர்கள் நாட்டில் நடமாட முடியாதிருந்தது. நல்லவர்களுக்கு இறைவன் என்றும் துணை போவதாக வரலாறுகள் பகர்கின்றன.

வேதனை தாங்காதவர்கள் இறைவனை நாடினர். நல்லோரை ,நரகவேதனையளிக்கும் நரகாசுரனை அழிக்க காத்தற் கடவுளாகிய விஷ்ணுவிடம் முறையிட்டனர். பதினாறாயிரம் பெண்கள் அவர்முன் கண்ணீர் விட்டு நின்றனர். உலகில் தர்மத்தை நிலைநாட்ட விஷ்ணு புறப்பட்டார். தன் மனைவியாகிய சத்தியபாமையுடன் அதுவும் மனைவியையே தேரோட்டியாகக் கொண்டு போருக்குப் புறப்பட்டான் கண்ணன். இறைவன் அளித்த வரங்களைக் கொண்டு. கடும் சமர் செய்து அழிந்தான் நரகாசுரன்.

நரகாசுரன் அழிந்தாலும், அழியும் தறுவாயில் இறைவனிடம் ஒருவரம் கேட்டான். தீமைகள் அழிந்து நன்மை தலையெடுத்த நாளாக எனது அழிவு உலக மக்களால் கருதப்பட்டு, விழாவாக எடுக்கப்பட வேண்டினான். கண்ணனும் அதற்கு இணங்கினான். அத்தினமே தீபாவளி ஆயிற்று.

தீபாவளி என்பது தீப ஆவளி எனப் பொருள்படும். தீபங்களின் வரிசை என உணர்த்துவதால் அதர்மம் என்னும் இருளை அகற்ற தீப ஒளியை இல்லங்களில் ஏற்றி குடும்பப் பெண்கள் தமது குங்குமத்துக்கு மதிப்பளிக்கும் பெருநாளாக்கினர்.

ஐப்பசி மாதத்துத் தேய்பிறை காலத்து பதினான்காம் நாளே தீபாவளி கொண்டாடப்படுகின்றது. இது அமாவசையின் முதல்நாள். பலர் அமாவாசையில் தீபாவளி வருமென்பது தவறாகும்.

இராமபிரான் இராவணனைக் கொன்று வெற்றியுடன் திரும்பிய நாள்தான் தீபாவளி என்றும் சொல்வர். ஜைனசமயத்தவரின் 'ஞானியார்' என்ற பெருமகான் மறைந்த நாள் தீபாவளியென்றும் கூறுவர்.

தீபாவளி பற்றி எப்படிக் கூறப்பட்டபோதிலும் தீபாவளி ஒரு புனிததினம். இறைவழிபாட்டிற்குரியதினம். இதனை நாம் மனதில் இருத்துவோமாக.

- அண்ணன்

## வெள்ளத்துக்கு 4குழந்தைகளும் தாயும் பலி

சென்னை, நவ. 9

மதுரையில் கடந்த திங்களன்று பெய்த பெருமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தில் ஒரு பெண்ணும் அவரின் நான்கு குழந்தைகளும் அடித்துச் செல்லப்பட்டனராம்.

இப்பெண்ணுடைய கணவரும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டபோதிலும் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். [இ]

அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
. சுத்தமான பவுணுக்கும் கண்ணைக் கவரும் நவீன
வேலைப்பாடுகளுக்கும் யாழ்ப்பாணத்தில்
நம்பிக்கை வாய்ந்த புகழ்பெற்ற ஸ்தாபனம்
கே. கே. வி. யாழ்ப்பாணம்
நகைமாளிகை
82/4 கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணம்.
போன்; 362
தங்கப்பவுண், வைர நகைகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடர்கள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படும்
K. K. V. Jaffna Jewel House
82/4 Kasturiar Road JAFFNA
Phone: 362

பிறநாட்டுப் பிரயாணமா?
உங்களுக்குத் தேவையான பாஸ்போட், விசா
மற்றும் பிரயாண ஒழுங்குகளுக்கு
உடனே தொடர்புகொள்ளுங்கள்.
Green Field Travel Operators
கிறீன் பீல்ட்
ரவல் ஒப்பறேற்றர்ஸ்
26, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

அண்ணா கோப்பி
வாடிக்கையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும்
எமது உள்ளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்


சோயாற்றின்
முழுக் குடும்பத்திற்கும் ஏற்ற ஓர் அதி உன்னத பானம்
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொ. பே. இல: 7412
கிளை:-
No. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ. பே. இல: 7413
No. 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

# தேவர்வாழ்வும் மாதர்...
# மலர்ந்த தீபத்திருநா...

ஒளி வளிபாடுசக்தியினைக் கொடுக்கின்றது. சக்தியினைக் கொடுப்பது விரதங்கள். விரதம் வெற்றி கண்டபின் விழாக்களுக்கும் பண்டிகைகளும், காரண காரியமாகக் கொள்ளப் பட்டன.

அந்த வகையில் தீபாவளி விழாப் பிறந்ததற்குப் பல கர்ணபரம்பரைக் கதைகளைக் கூறுகின்றனர்.

மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்று தான் கிருஷ்ணவதாரம் அவரே கண்ணபிரான்.

மூவுலகுக்கும் அதிபதியான தேவேந்திரன் தன் பட்டத்து யானையான ஐராவதத்துடன், பதை பதைக்க, துவாரகாபுரியின் பரிபாலகனான கண்ணனைப் பார்க்க ஓடோடி வருகிறான். அவன் வரப்போகிற காரியம், வந்துள்ள காரியம் நடக்கவேண்டிய காரியம், அதன்பின் ஏற்படக் கூடிய மாற்றம் இவையாவையும் அறிந்த கண்ணபிரான் தேவேந்திரன் அபயக்குரலுக்குச் செவி சாய்க்கின்றார்.

''ஐயனே பூமியின் புதல்வனான நரகாசுரன் முனிவர்களையும் தேவர்களையும் நல்லவர்களையும் வல்லவர்களையும் கொடுமை செய்கிறான். அழகுக்கன்னியர்களை காராகிருகத்தில் அடைத்து வைத்து அட்டகாசம் செய்து வருவது தேவரீர் தங்களுக்கே நலமாகப்படுகிறதா...... எங்கள் குறை களைவீர்'' என்று மனம் கலங்குகின்றான் தேவேந்திரன்.

பாற்கடலில் பாம்பணையைப் பற்றிக் கொண்டு பழக்கப் பட்டிருந்த அனந்தசயன அவதாரன் கண்ணன் அசுரன் கதை கேட்டும்புன்னகை புரிகின்றார். கமலக் கண்ணனின் புன்னகைக்குரிய அர்த்தம் இந்திரனுக்குப் புரிகிறது.

ஆபத்பாந்தவனான கண்ணனுக்கும் அசுரர் கூட்டத்திற்கும் உக்கிரமான போர் நடக்கிறது.

## வல்லவை ஆறு

இறுதியில் நரகாசுரன் ஒருகின்றான். கண்ணனின் சக்ராயுதம் அவன் உயிரைப் பிரிக்கிறது. உலகம் இருண்டு விட்டது. கண்ணனின் தேரை ஓட்டிவந்த சத்ய பாமையும் நடுநடுங்கி விட்டாள்.

கோடிக்கணக்கான அரக்கர் பலத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தவனான அரக்கச் சக்கரவர்த்தியுடன், கண்ணன் போராடிப் போராடிக் கடைசியில் மயக்கமுற்றுக் தேர்லேயே விழுந்து விட்டார். அரக்கரின் கெக்கரிப்புக் குரல் உலகைக் குலுக்கிற்று சத்ய பாமைக்கு எங்கிருந்தோ ஒரு புத்துணர்வும், விதியின் கடமை உந்துதலும் பிறக்கின்றன.

''ஒரே நொடியில் அன்னை பாமையின் வில்லிலிருந்த பாணம் புறப்பட்டு அரக்கரின் நெஞ்சைப் பிளக்கிறது அவன் அலறியபடி தரையில் இமயமெனக் கவிழ்ந்து வீழ்ந்தான்—

''நரகாசுரன் ஒரு பெண்ணால் தான் கொல்லப்படவேண்டும் என்பதும் அவன்பெற்ற சாபங்களில் ஒன்றுதலின் அவனைப் பெற்ற தாயே, அவன் கொடுமைகளைப் பொறுதவளாய் மறுபிறவியி... பிரானின் மனைவி... தன்கையால் ... என்றும் கதைக்...

''என் மகன் ...வின் கரத்தினால் ...டான்'' என்று தே... போது நான் பெற்...

## ஆணவ...

....

அன்றுதொ...

ஒன்றுபட்ட...

உண்டவர்க... பண்டிகை...

ஆணவத்தை...

ஆணவத்...

கொள்ளை...

கள்காமத்...

பண்டிகைக... கொண்டா...

கொன்றுடிக்... மன்றுடி மா...

சொன்னதை...

நன்மையெ...

போகின்ற ... ஆகின்ற அ...

அசுர உபத்... நிசமே இரு... நெஞ்சத்தா... அஞ்சத்தா...

அஞ்சி ஓடு... நெஞ்சே ெ... தீயோர் தி... தூயோர் ...

சாவின் சு... பாவிநர கா... ஏற்றுப் ெ... சாற்றுந்தி...

உண்ணிப் பெரு...றேன்'' என்று ... தாய் கூறுவதா... கொள்கிறார்கள்.

நரகாசுரன் ... தேவர்கள்,


வாடிக்கையாளர்கள், அபிமானிகள், நண்பர்களுக்கு
தீபாவளி நன்னாளில் எங்கள் மனங்கனிந்த
வாழ்த்துக்கள்!
பட்டு ஜவுளிகளுக்கு, கவர்ச்சி மிக்க
வர்ணங்களில், புதிய டிசைன்களில்
கலைமிக்க பிடவைத் தினுசுகளுக்கு
விஜயஞ்செய்யுங்கள்

**கணேசானந்தாஸ் சில்க் பலெஸ்**

மக்கள் நவீன சந்தை
15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
எமது மங்களகரமான
**தீபாவளி வாழ்த்துக்கள்!**

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலியவைவைபவங்களுக்குத் தேவைப்படும் சகலசாமான்களும் தங்கள் திருப்திக்கேற்றவகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்

★ பச்சை சந்தனம்
(உடன் இயந்திரத்தினுல் அரைத்தது)
எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

**எஸ். சுப்பிரமணியம் அன்ட் கொம்பனி**
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541

பாலேந்திரா பில்டிங், 160, செட்டியார்தெரு, கொழும்பு- 11. தொலைபேசி: 35825



'புதிய சிங்கப்பூர் மருந்துச்சாலை'
எமது வாடிக்கையாளர் யாவருக்கும்
**தீபாவளி வாழ்த்துக்களை**
தெரிவிக்கின்றோம்.
எம்மிடம்
சகல விதமான ஆங்கில மருந்து வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய சிங்கப்பூர் மருந்துச்சாலை**
230, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.
உரிமையாளர்
சி. மகேந்திரன்



அனைவர்க்கும் அன்பு கலந்த
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**
★ கவர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்

**நோர்தேண் இன்டஸ்றீஸ்**

8|1, ஸ்ரான்லி றேட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.



தீபாவளி வாழ்த்துக்கள்
சீதன ஒழிப்பையே தம் இலட்சியமாக்கி சாதனை
ஒன்றெரு சரித்திரம் சமைத்திட தித்திக்கும் இந்தத்
தீபாவளித் திருநாளில் இளைஞர்கள் யுவதிகள்
அனைவருக்கும் எங்கள் இதயம் நிறைந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்!**

ஆ. தங்கரத்தினம்
உறுப்பினர்
சீதன ஒழிப்பு இயக்கம்.
களபூமி, காரைநகர்.



விவசாயப் பெருமக்களுக்கு
**எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

யாழ். விவசாயிகளே
உங்கள் உற்பத்திப் பொருட்களைக் கொழும்பில் கொடுத்து
யாழ்ப்பாணத்தில் பணம் பெறுங்கள்

கொழும்பில் 68, நாலாம் குறுக்குத்தெரு
என். கே. மயில்வாகனம் கம்பெனியில்
ஒப்படைக்கும் பொருட்களுக்கு இங்கே நாம் பணம் கொடுக்கின்றோம்.

**என். கே. மயில்வாகனம்**

73 D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதமுடைய சேவையாளர்கள்.



தீபாவளித் திருநாளை மங்களகரமாகக்
கொண்டாடி மகிழ்ந்திடுக
நல்லெண்ணெகளில் ராஜா
**வி. எஸ். பி. ஸ்பெஷ...**
**நல்லெண்ணெ**
எமது விற்பனையாளர்கள், ஆதரவாளர்கள்...
அனைவருக்கும்
எமது உளங்கனிந்த வாழ்த்துக்க...
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண...

# நர்வாழ்வும்

# நாள்

ரிஷிகள், மாதர்கள், நன்மக்கள் யாவரும் மகிழ்ச்சியில் திளைத்னர்.

'அக்கிரமம் அழிந்தது நீதி வென்றது' என்பதே எங்கும் பேச்சு மக்களால் வணங்கப்படும் ஜனார்த்தனன் ஆனுன்

றுபிறவியில் கண்ண ன் மனைவியாக வந்து பால் கொன்ருள்'' கதைக்கப்படுகிறது. மகன் மகாவிஷ்ணு த்தினுல் கொல்லப்பட் என்று கேள்விப்பட்ட நான் பெற்ற பேறுகளை

கண்ணனன் எனும் நாரணன் மும்மூர்த்திகளின் தலைவனுய் கேசவநிதி காட்சியளிக்கிருன். தன்னைக் கிருபா நிதியென வணங்கும் உலகைக்கண்டு கண்ணன் கடமையில் கருத்தானுன். அவனே புருஷோத்மன் அப்போது அசுரனின்

## ணவத்தை யாரழித்தார்!

....கவிஞர் வே- ஐயாத்துரை....

ன்றுதொட்டு இன்றுவரை ஆணவத்தைப்
போக்கிடென்றே
ன்றுபட்ட உட்கருத்தை ஓதுகின்ருர்-
கொன்றுதொட்டே
ண்டவர்கள் ஒன்றுபட்டு ஊனை உறிஞ்சுதற்காய்ப்
ண்டிகையைக் கொன்றுவிட்டார் பார்

ஆணவத்தைப் போக்கிடென்று ஆகமங்கள்
போதித்தும்
ஆணவத்தை யாரழித்தார் அம்புவியில்-
ஆணவமே
கொள்ளை கொலை வஞ்சனையாம் கூட்டுறவின்
மாதலைவன்
ள்காமத் திற்குமதே காண்

ண்டிகைகள் அத்தனையும் பாரைப் பதப்படுத்தக்
கொண்டாடும் தத்துவங்கள் கொள்வழியே-
கண்டபடி
கொன்ருடிக் கூத்தாடிக் குற்றம் புரிந்தாடி
ன்ருடி மாளுகிருர் மன்

சொன்னதையே யாம்திருப்பச் சொல்லுகிருேம்
இன்றுவரை
ன்மையெதும் கண்டிலமே நாட்டினிலே-
புன்வழியிற்
பாகின்ற மக்களெலாம் போய்ப்பின் வருவார்கள்
ஆகின்ற அன்புவழி ஆள்

சுர உபத்திரவம் அன்றுபோ லின்றும்
சமே இருக்கிறது நேரே- கசிவற்ற
நெஞ்சத்தார் செய்கின்ற நிந்தனையை யாம்பார்த்தால்
அஞ்சத்தான் வேண்டும் அகம்

அஞ்சி ஒடுங்கி அடங்கிக் கிடவென்ருல்
நெஞ்சே பொறுக்குதில்லை நீதிமுன்னே-வஞ்சனைசெய்
தீயோர் திருந்துதற்குத் தீபா வளிநெறியைத்
ஞயோர் தொகுத்துரைத்தார் சொல்

ாவின் சமயத்தில் தன்தவறைத் தானுணர்ந்த
ாவிநர காசுரனின் பக்திதனை- தேவனுமே
ற்றுப் பெருவரத்தை ஈந்துகடைத் தேறவைத்தார்
ாற்றுந்தி பாவளியைச் சார்

ரிப் பெருமைப் படுகி என்று அரக்கரின் கூறுவதாகவும் பேசிகிருர்கள். சுரன் மறைவால் கள், முனிவர்கள்

அபயம் கேட்கிறது. கண்ணன் ரட்சிக்கின்ருர்.

''ஐயனே தாங்கள் கண்ணபிரானுக அவதரித்து துவாரகாரின் பாதுகாவலனுக இருந்து உலகின் பாரத்தைக் குறைக்கவும் அநீதிகள் எங்கெங்கு தலையெடுக்கின்றதோ அங்கெல்லாம் துஷ்ட நிக்ரஹ பரிபாலனம் செய்ய அவதரித்த தேவ தேவா என்சிறப்பு! உன் கைகளினுல் நிகழ்வதற்குப் பெருமைப் படுகிறேன். நான்

(6-ம் பக்கம் பார்க்க)


ாகக்
ா
ஷல்
ார்கள்
துக்கள்
ஸ்
ப்பாணம்.



வாடிக்கையாளர்கள், அபிமானிகள், அன்பர்களுக்கு

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

கவர்ச்சிமிகு, சித்தைவகைகள், தரமான சூட்டிங், சேட்டிங், வண்ணஜால, வனப்புமிகு நைலோன் சாறிகள், மல்துணிகளுக்கும், பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்.

சலுசலா நிறுவன உற்பத்திப் பொருட்களின் பிரதம விற்பனையாளர்.

க. நாகமுத்து அன் சன்

(இறக்குமதியாளரும் பிரதான பிடவை விற்பனையாளரும்)
48—50, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7475



தீபாவளி வாழ்த்துக்கள்!

வனிதையர் விரும்பும் வகை வகையான

பிடவைத் தினுசுகள்
கூறைச் சேலை வகைகள்
ஆடவர் விரும்பும் அழகிய சேட்டிங்
சூட்டிங் வகைகளுக்கு

மணியம்ஸ்

16, நவீனசந்தை ... யாழ்ப்பாணம்
போன்: 7545



வாடிக்கையாளர்களுக்கு எமது மனங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஆறுமுகம் நல்லதம்பி
அன்சன்

நகை வியாபாரம்

75, கன்னதிட்டி.

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 664



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்!

∴ மங்கையர்க்குத் தேவையான
ஆடம்பர அழகு சாதனப் பொருட்களுக்கும்
∴ திருமண அன்பளிப்புப் பொருட்கள்
∴ மற்றும் கோல்ட் கவரிங் நகைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்
(நகைகளுக்கு கோல்ட் கவரிங் செய்து கொடுக்கப்படும்)

இ. எஸ். கே.
கோல்ட் கவரிங்

9, A, நவீனசந்தை ... யாழ்ப்பாணம்.



தீபாவளி வாழ்த்துக்கள்

அமுதா நகைமாளிகை

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் ஓடர் நகைகளை குறித்த தவணையில் சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்விப்பதற்கு

அமுதா நகைமாளிகை

உரிமையாளர்: க. கந்தையாபிள்ளை

தங்க, வைர, நகை வியாபாரிகள்
363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



தமிழர் தம் இல்லம் எல்லாம் விடிவு பிறந்து, பேருவகை மலர்ந்திட இத்தீபாவளித் திருநாள் வழி சமைக்கும் என்ற பூரண நம்பிக்கையுடன்

அனைவர்க்கும்
எம் இதயபூர்வமான
வாழ்த்துக்கள்

க. ஜெயபாலசிங்கம் அன் கோ.,
கப்பல் ஏஜன்ட்ஸ்,
காங்கேசன்துறை.



சண் யோகோப்பி
அன் கூல்பார்

| | |
|---|---|
| ∴ கட்லட் | ∴ மஸ்கெற் |
| ∴ மாஜறின் | ∴ பட்டர் |
| ∴ மட்டன் றோல் | ∴ பற்றிஸ் |
| ∴ பம்பே சுவீற்ஸ் | ∴ லட்டு |
| ∴ கேக் வகைகள் | ∴ ஐஸ்கிறீம் வகைகள் |

★ சண்யோ பீடா

இல: 16, நவீனசந்தை. (பஸ்நிலையம் முன்பாக)
சுன்னகம்.



ஏர் உழுது பார் காக்கும்
விவசாயப் பெருமக்களுக்கு
எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

கதிர்மணி அன் கோ
142—144, நாலாம்குறுக்குத் தெரு,
கொழும்பு-11
போன்: 20246

கிளை:
30/2, மானிப்பாய்வீதி
யாழ்ப்பாணம்.



mws மில்க்வைற்

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும்

தீபாவளி வாழ்த்துக்கள்!

பொன்விழா பொலிவுகண்ட யாழ்ப்பாணம்
மில்க்வைற் தாபனத்தார்

தமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிருர்கள்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. எண். 77 — யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அபிமானிகள், நண்பர்களுக்கு
எமது இதயம்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
★ மின்சார உற்பத்திப் பொருட்கள்
★ மின்சார ஒப்பந்த வேலைகள்
நினைவில் நிற்பவர்கள்
யாழ்ப்பாண
எலெக்ரிக்கல்ஸ்
(Jaffna Electricals)
6, ஸ்ரான்லி வீதி :-; யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
தீபாவளி வாழ்த்துக்கள்!
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண்
வைரங்கள்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப் பவுண் நகை மாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 585

அனைவருக்கும் அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
ஃ அபிஷேகச் சாமான்கள்
ஃ அத்திபாரச் சாமான்கள்
ஃ விவாக மூகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல
மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை ... யாழ்ப்பாணம்.
போன்: 7135

அனைவர்க்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த
தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய
மறவாதீர்கள்
பொ. அம்பலவாணர்
தங்க, வைர, நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: 'வைரம்'

## எதிரி விடுதலை!

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கொலைவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். விசாரணையின் பின் ஜூரி சபையினர் எதிரி குற்றவாளியெனத் தெரிவித்ததை தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம் அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி மல்லாகத்தில் கந்தையா இராசேஸ்வரன் என்பவரைக் கொலை செய்ததாக க. ஆறுமுகராசா அல்லது சின்னராசா என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சாரபில் சட்டத்தரணி ஆர்.பி தம்பிரத்தினம் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம். சட்டத்தரணி ரி. குணரத்தினம் ஆகியோர் ஆஜராளுர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர் (க-அ)

## றிமாண்டில் சிறுவன்

[மாவிட்டபுரம்.]

தங்கக் காப்புடன் கம்பி நீட்ட முயன்று கைதான வேலைக்காரச் சிறுவன் ஒருவன் மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

பன்னாலையைச் சேர்ந்த ரி. செல்வரத்தினம் என்பவரது வீட்டில் வேலைக்கிருந்த மலைநாட்டைச் சேர்ந்த இராசேந்திரன் என்ற சிறுவனிடம் 2000 ரூபா பெறுமதியான தங்கக்காப்பு ஒன்றைக் கொடுத்த எஜமான் அதை பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டு வருமாறு கூற அச்சிறுவன் காப்புடன் கம்பி நீட்டினாராம்.

இதுகுறித்துக் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்துவிசாரணையிலீடுபட்ட பொலிசார் தமது ஊருக்குச் செல்வதற்காக ரயிலேறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த இச்சிறுவனை யாழ்ப்பாணத்தில் வைத்து ரயிலில் கைது செய்தனர்.

இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். [அ]

## மகஜர் கையளிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு பெரிய தம்பிரான் கோயிலுக்கு அருகாமையிலுள்ள நெசவுநிலைய வளவில் கிராம முன்னேற்றச் சங்க கட்டிடத்தை கட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு.சோ. அருணாசலத்தை வேண்டும் ஒரு மகஜர் சுழிபுரம் மேற்கு மக்களால் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இளைப்பாறிய ஆசிரியர் திரு எஸ். இராமநாதன் மகஜரை உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார். புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசினால் 12,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
யப்பான்
ஜுவலர்ஸ்
(க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்)
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 518

வாடிக்கையாளர்களுக்கு
எமது மங்களகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்
நேசன் இண்டஸ்றீஸ்
230, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
★ அஸ்கொட் நீலம்
★ கிங்டம் கற்பூரம்
தயாரிப்பாளர்கள்!
NESAN INDUSTRIES
230, Manipay Road, Jaffna.

எங்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எங்கள் உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
வசந்தா
ரெக்ஸ்ரைல்ஸ்
(பழமையானதும் பெயர் பெற்றதுமான புடவை
அச்சிடும் சிறந்த ஸ்தாபனம்)
42, கஸ்தூரிவீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 4 9 5

அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எமது அன்புகலந்த தீபாவளி வாழ்த்துக்கள்!
சுத்த சைவ போஜனசாலை
ஸ்ரீ தாமோதரவிலாஸ்
239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். ஹலோ: 7065.

## தேவர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை பெற்ற இந்த நாளை மக்கள் தம்மனத்தில் இருத்தி நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து வாழ்வில் ஒளிபெற ஒருவிழாவாகக் கொண்டாடும்படி கேட்டுக்கொள்கிறேன்......'' என்று நரகாசுரன் வேண்டினும் இதுவே தீபாவளி யாயிற்று என்பது பாகவத புராணம். (ஆதாரம்: மலேசியா 'உதயம்')

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**Regal** (Jaffna)

Daily at 4-45 7-00 & 9-30 p. m. only

**DAYTON'S DEVILS**

(Color-Action film)

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்

**துணிவே துணை**

---

**லிடோ** எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ். நகர்) போன்: 7693

**நீதிக்கு தலைவணங்கு**

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
கடைசி வாரம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த

**அன்னக்கிளி**

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**பூலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
இன்று 10-30 காட்சி
எம். ஜி. ஆர்-லதா

**உழைக்கும் கரங்கள்**

---

சினிமா ரசிகர்கள் மற்றும்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.

**உலகம் சுற்றும் வாலிபன்**
(கலர்)

---

சினிமா ரசிகர்கள் மற்றும்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
சந்திரபாபு

**கவலை இல்லாத மனிதன்**

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்
தீபாவளித் திரைவிருந்தாக

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
இன்று மட்டும் காண்பிக்கப்படுகின்றது!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திலிப்குமார் ∴ மதுபாலா ∴ பிருதிவிராஜ்கபூர்
நடனங்கள் கலரில்

**அக்பர்**
(தமிழ்) - புதிய பிரதி

நாளை முதல்
ஏ. பீ. நாகராஜனின்
புராண வண்ணச் சித்திரம்

**அகத்தியர்**
(புத்தம் புதிய பிரதி)

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

**றியோ** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30,
6-30, 9-30

மகத்தான தீபாவளி வெளியீடு!
அதிசயம், அற்புதம், தேனினும் இனிய சங்கீதம்
நிறைந்த திரைக்காவியம்.

மாலாசிங்க, சஞ்ஜே,
நலீமா, விஜேகுமார்,
ஜெனிவோக்கர்

**தில்லகி**
(ஹிந்தி)

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
கடைசி வாரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த

**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்
ஐந்தாவது வெற்றி வாரம்!

**ராஜா**- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!

ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த

**தசாவதாரம்**
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்]



---

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
கடைசி வாரம்

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்

**பெண் தெய்வம்**

---

**மனோஹரா** (யாழ். நகர்)
மகத்தான தீபாவளி வெளியீடு!
சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

காலை 6 மணிக்காட்சியுடன் ஆரம்பம்



★ நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
★ நடிப்புச் செல்வம் ஜெமினிகணேஷ்
★ லக்ஷ்மி ★ நிர்மலா
★ சுந்தரராஜன் ★ ராமதாஸ்
★ பாலாஜி ★ மனோகர்
★ மனோரமா ★ நாகேஷ்
★ சுப்பையா

நடிக்கும்
சுஜாதாவின்......

**உனக்காக நான்**

(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன் சி. வி. ராஜேந்திரன்

சிறந்த கதை! பண்பட்ட நடிப்பு! இனிமையான பாடல்கள்!
சிந்தனைக்குகந்த கருத்துக்கள்!

சிவாஜி கணேசனும், ஜெமினி கணேசனும் இணைந்து நடித்து ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று இந்தியாவில் வெற்றிமுழக்கமிட்ட படம்

**மணிவாக்கு**

அகத்திற் தூய்மையுடையோன், புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.
—சாந்திமகான்


# ஈழநாடு
The Eelanaadu


## அசுரர்கள்!

ஒருவன் கடும்தவம் செய்தான்.

அவனது தவவலிமையைக் கண்டு காட்சி கொடுத்தகடவுள் அவன் கேட்ட வரங்கள் யாவற்றையும் வழங்கினான்.

கடும்தவம் செய்து பெற்ற வரத்தை அவன் துஷ்பிரயோகம் செய்தான்.

மாந்தரை அழித்தான், தேவரை வதைத்தான். தன்னை மிஞ்சியது எதுவுமில்லை என்று இறுமாப்புக்கொண்டான். அழிப்பதிலேயே இன்பங்கண்டான்.

அவனது கொடுமைஎல்லை மீறிப்போனது. தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர்.

திருமால் வெகுண்டெழுந்தார். அசுரன் அழிந்தான்.

அவன் ஒழிந்த அதாவது தீமைகள் மாய்ந்த தினம் தான் தீபாவளி. இதையே இன்றும் மக்கள் பெரும் திருநாளாக -விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

நரகாசுரன் அழிந்துவிட்டானா? இன்று எத்தனை அசுரர்கள் எந்தெந்த உருவில் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு இந்தியா எத்தனை கடும் தவம் செய்தது? இந்தியாவைப் பின்பற்றி இலங்கை உட்பட எத்தனை நாடுகள் பல்வேறுவிதமாகத் தபசில் ஈடுபட்டன.

தவம் பலித்தது!

இன்று என்ன நிலை?

மொழி வெறி என்றபெயரில் அரக்கர்கள்; இனவெறி என்ற உருவத்தில் அரக்கர்கள்; அதிகாரவெறி என்ற அசுரர்கள். இப்படி எத்தனையோ அரக்கர்களும் அசுரர்களும் தலைவிரித்தாடுகின்றனர்.

சமீபத்தில் இனவெறி அரக்கர்களின் கோரச் செயல்களை நமது நாடு கண்ணால் கண்டது.

எப்போதோ மாண்டு மடிந்துவிட்ட நரகாசுரனுக்காக நாம் தீபாவளியைக் கொண்டாடுவதால் பயனில்லை.

இப்போது தலையெடுக்கும் அசுரர்களின் அழிவுக்காகவும் ஆண்டவனை வேண்டிப் பிரார்த்தனை செய்வதில் தான் மக்களின் எதிர்காலம் குறிப்பாகத் தமிழ்மக்களின் மகிழ்ச்சி தங்கியிருக்கிறது.

"தார்மீக ஆட்சியை" உருவாக்கப்போவதாகநமது நாட்டுப்பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கங்கணம் கட்டியிருக்கிறார்.

அவரது முயற்சி வெற்றிபெற்று சாதி, மத, இன, அரசியல், அதிகார அசுரர்கள் நாட்டிலிருந்து ஒழிந்துவிடுவார்களென்று எதிர்பார்ப்போம்.

# அமைச்சரின் மகனுக்கு கத்திக்குத்து!

(கொழும்பு)

விவசாயக்காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவின் புதல்வர் கத்திக்குத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

திங்கட்கிழமை அதிகாலை கொழும்பிலுள்ள அமைச்சரின் வீட்டில் திருடுவதற்காகப் புகுந்த ஒருவனை அமைச்சரின் மகன் நந்தா சேனநாயக்க கண்டு, பிடிக்கச்சென்ற சமயம் கத்தியால்குத்தப்பட்டதாகக்கூறப்படுகின்றது.

சம்பவம் நடந்த இடத்தை புலனாய்வுப் பிரிவு அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பார்வையிட்டார். விரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டுள்ளன. குற்றவாளி பயங்கர ஐ ஆர். வி. யாக இருக்கவேண்டும் என்றும், அவனைமடக்கிப் பிடிப்பது சிரமமாய் இருக்காதென்றும் பொலிசார் கருதுகின்றனர்.

அமைச்சர் சேனநாயக்க இப்பொழுது வெளிநாடு சென்றுள்ளார். (ம)

## உள்ளூராட்சி தேர்தல் ஜனவரியில்?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதம் 4-ம் திகதி உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறக் கூடும்என்று நம்பகரமான ஒருவட்டாரத்திலிருந்து தெரியவருகின்றது.

1978-ம் ஆண்டு தை மாதம் 4 ம்திகதியளவில் மாநகராட்சி மன்றங்கள், நகரசபைகள், கிராமாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் தேர்தல்கள் நடாத்தப்பட இருப்பதாகத் தெரிகிறது. (கி)

## முகமூடிக்கொள்ளை: ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

(கொடிகாமம்)

மீசாலை முகமூடிக்கொள்ளை தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

அல்லாரை தெற்கு மீசாலையில் நடைபெற்ற கொள்ளை முயற்சியின்போது கொலை செய்யப்பட்ட முகமூடிக் கொள்ளையனுடன் சென்றதாக சந்தேகத்தின்பேரில் சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். குகதாசன் நான்கு இளைஞர்களைக் கைதுசெய்து சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்ஆஜர் செய்தர்.

அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்களுள் ஒருவரான எஸ். கண்ணபிரான் அடையாளம் காணப்பட்டார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதித்தார். (இ)

## இந்த எம். பி.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கமும், கப்பல் யோக்குவரத்து விமானப் போக்குவரத்துச் சுற்றுலா அமைச்சுக்கு திரு. சம்பந்தனும், நிதி தொழிலமைச்சுக்கு திரு. சூசைதாசனும், கல்வியமைச்சுக்கு திரு. ராஜலிங்கமும், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கு திரு. திருநாவுக்கரசுவும், சுகாதாரம், விளையாட்டுத்துறை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு திரு லோகேஸ்வரனும், அஞ்சல் தொலைபேசித் தொடர்புகளுக்கு திரு. கனகரத்தினமும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கூட்டணிப் பேரவைக் குழு இந்த நியமனங்களைச் செய்துள்ளது. (ம)

## செய்திக்கு எஸ். பி. மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நடைபெற்றுள்ள கொள்ளைகள், வழிப்பறிகள் என்பவற்றிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று தாம் கூறியதாக தமிழ்த் தினசரி ஒன்றில் (ஈழநாடு அல்ல) வெளிவந்த செய்திக்கு யாழ். பொலிஸ் அதிபர் திரு ரண்முத்துகல மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்கள் பற்றிய புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மேற்படி கருத்தைத் தாம் வெளியிடவில்லையென்றும் அவர் தலைமைப்பீடத்திற்கு அறிவித்துள்ளார். (உ)

## அமிரிடம் முறையிடுவர்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை விசேட ஆணையாளரால் உயர்ந்த திட்டமிடப்பட்டுள்ள சோலைவரி அதிகரிப்பை உடன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை வரியிறுப்பாளர்களின்கையொப்ப சேகரிப்பு மூலம் கிராமசபைப் பகுதியில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் மகஜர் ஆணையாளரிடம் கையளிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க சுழிபுரம் கிராமசபை வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் திரு. சி. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் மூலமாக இவ்வரியுயர்வை உடன் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி வரிஉயர்வு உத்தேசத்தை ஆட்சேபிக்கும் நோக்குடன் "சுழிபுரம் கிராம சபை வரியிறுப்பாளர் சங்கம்" என்ற புதிய சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (உ)

## உதைபந்தாட்டப் போட்டி

(வவனியா)

வவனியா மகாவித்தியாலயத்திற்கும், மன்னார் சென் சேவியர் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 2ம் பிரிவில் 1-0 கோலால் வவனியா மகாவித்தியாலயம் சென்சேவியர் கல்லூரியைத் தோற்கடித்தது.

## காலமானார்

(யாழ்ப்பாணம்)

கைதடி கி. ச. முன்னாள் உறுப்பினரும் சமூகசேவகரும் மறவன்புலோ இளைப்பாறிய தலைமையாசிரியருமான திரு. நா. பொன்னம்பலம் தமது 69 வயதில் காலமானார்.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் தலைமையாசிரியராக நீண்டகாலம் பணிபுரிந்ததுடன் மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கம், கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றை உருவாக்கவும், நெசவு நிலையம் ஒன்றை அமைக்கவும், விவசாயத்திட்டங்களை உருவாக்கவும் அதன்மூலம் மக்கள் முன்னேற்றம் அடையவும் நெடுங்காலம் பாடுபட்டார். இவர் கைதடிக் கிராமசபை உறுப்பினராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தார்.


# இலங்கை வங்கி

தனது

## இரு பிரதான கிளைகளை

1977ம் ஆண்டு

நொவம்பர் மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை

திறக்கவிருக்கிறது.

## (1) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணக் கிளை

காலை 10-00 மணிக்கு

யாழ். தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர்

**திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள்**

இக்கிளையைத் திறந்துவைப்பார்கள்

## (2) சாவகச்சேரிக் கிளை

மாலை 3-00 மணிக்கு

சாவகச்சேரித் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர்

**திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள்**

இக்கிளையைத் திறந்துவைப்பார்கள்.

வாடிக்கையாளர்களும், நலம்நாடிகளும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

# இலங்கை வங்கி

பிரதேசக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7471, 7622.



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] சார்பில் யாழ்ப்பாணம் [illegible] மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registered as News paper in Sri Lanka.